*வினா எண். 1035—திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மேலாளர், ஊராட்சி வளர்ச்சி அலுவலர், கல்வி வளர்ச்சி அலுவலர் ஆகியவர்களுக்கு ஒரே பணி விதி கொண்டு வரப்பட்டு ஒரு சில மாவட்டங்களில் மட்டும் செயலாக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மற்ற மாவட்டங்களுக்கும் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு— (அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய மேலாளர்கள் ஊராட்சி வளர்ச்சி அலுவலர்கள், கல்வி வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடையே பணிமாற்றங்கள் செய்யலாம் என்பது பற்றிய அரசாணை சேலம், தஞ்சாவூர், தர்மபுரி போன்ற ஒரு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இதற்கிடையில் இப்பிரச்சினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதனால் மேற்படி அரசாணையை தொடர்ந்து செயல்படுத்துவதா, அல்லது அதை ரத்து செய்யவோ வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. நீதிமன்ற முடிவுக்குப் பின்னர் இதுபற்றி அடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோமணம்: தலைவரவர்களே, இந்த ஆணையை செயல்படுத்துவது தடைபட்டு, கோர்ட்டிலே இருப்பதாகச் சொன்னார்கள். சீக்கிரமாக அதை முடிவுக்குக் கொண்டுவர அரசு முயற்சி எடுத்திருக்கிறதா? அதில் எந்த அளவுக்கு பலன் ஏற்பட்டிருக்கிறது? இல்லை என்றால் சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவந்து, இந்த ஆணை அமுல் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சீக்கிரமாக நடத்த வேண்டுமென்றுதான் பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் எல்லாம் நடத்தப்பட்டன. இதைப் பொறுத்த வரையில் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தாலும் நீதிமன்றத்தின் முடிவு இன்னும் கிட்டாத காரணத்தாலும் தடை ஏற்பட்டிருக்கிறது; முடிவு கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

குரோம்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண். 1036—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குரோம்பேட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனையில் போதிய அறுவை சிகிச்சை அரங்கு இல்லாத காரணத்தால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?